மட்/ககு/வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் சித்தாண்டி
கொரோனா வைரஸ் காரணமாக வீட்டில் இருந்து கற்றல் - 2020
விசேட விடுமுறைக் கால வினாப்பத்திரம் (அலகுப் பரீட்சை)
தவணை 03
க.பொ.த உயாதரம் 2021
மானிட புவியியல்

பெயர்:..... **நேரம் : 1மணித்தியாலம்**

உலக விவசாயம்

பல்தேர்வு வினாக்கள்

- மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புக்குறியலுள்ள புள்ளிக்கோட்டின் மீது அதன் இலக்கத்தை எழுதுக.

1.உலக விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் முன்னேற்றகரமான தொழினுட்ப முறை அல்லாதது?

1 சேதன விவசாயம் 2. மரபணு விவசாயம் 3. பசுமைப்புரட்சி 4. சேனைப்பயிர் (.....)

2. உலகில் முதன்முதலாக பசுமைப்புரட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1. 1943 2. 1960 3. 1973 4. 1980 (.....)

3. உலகின் முதலாவது பசுமைப்புரட்சி இடம்பெற்ற நாடு எது?

1. பிலிப்பைன்ஸ் 2. மேக்சிக்கோ 3. பிறேசில் 4. சீனா (.....)

4. உலகின் முதலாவது பசுமைப் புரட்சி எப்பயிர் உற்பத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது?

1. நெல் 2. கோதுமை 3. சோளம் 4. பார்லி (.....)

5. உலகின் முதலாவது பசுமைப் புரட்சி செயற்றிட்டத்தை ஆரம்பித்த சர்வதேச அமைப்பு அல்லாதது?

1. ஐக்கிய நாடுகள் சபை 2. பிம்ஸ்ரெக்

3. உலக உணவு ஸ்தாபனம் 4. ரொக்பெலர் (.....)

6. உலகின் முதலாவது பசுமைப் புரட்சி செயற்றிட்டம் முடிவடைந்த ஆண்டு எது?

1. 1962 2. 1963 3. 1964 4. 1965 (.....)

7. உலகம் முழுவதும் பசுமைப்புரட்சி எத்தனையாம் ஆண்டு பிரபல்யமடைந்தது?

1. 1962 2. 1963 3. 1964 4. 1965 (.....)

8. பசுமைப்புரட்சி தொடர்பான சர்வதேச செயற்பாடுகளுக்காக சர்வதேச விவசாய ஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1. 1982 2. 1963 3. 1984 4. 1980 (.....)

9. பின்வருவனவற்றுள் கலப்பு விதை இனம் எது?

1. BG 407 2. IR 8 3. IR 36 4. நொரின் 10 (.....)

10. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ள நகரம் எது?

1. மணிலா 2. காத்மண்டு 3. சிட்னி 4. மும்பாய் (.....)

11. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தினால் உருவாக்கப்பட்ட நெல் இனம் எது?

1. BG 407 2. IR 8 3. IR 36 4. TN 1 (.....)

12. ஆபிரிக்க பிரதேசங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட நெல் இனம் எது?

1. BG 407 2. IR 8 3. IR 36 4. TN 1 (.....)

www.kedu.lk

13. நொரின் 10 குள்ளக் கோதுமை இனத்தை அறிமுகம் செய்த நாடு எது?

1. சீனா 2. பிறேசில் 3. யப்பான் 4. பிலிப்பைன்ஸ் (.....)

14. DNA உயிரணுக்களைப் பிரித்தெடுத்து மேற்கொள்ளப்படும் நவீன விவசாய முறை எது?

1. மரபணு தொழினுட்பம் 2. பசுமைப்புரட்சி

3. சேதன விவசாயம் 4. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை (.....)

15. மரபணு தொழினுட்பம் மூலமான விவசாய நடவடிக்கை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1. 1982 2. 1973 3. 1974 4. 1980 (.....)

16. மரபணு தொழினுட்பம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுகள் எத்தனையாம் ஆண்டு விற்பனை செய்யப்பட்டன?

1. 1992 2. 1993 3. 1994 4. 1990 (.....)

17. மண்ணினதும் சூழல் தொகுதியினதும் மக்களினதும் சுகாதார நிலையைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட விவசாய தொழினுட்ப முறை எது?

1. மரபணு தொழினுட்பம் 2. பசுமைப்புரட்சி

3. சேதன விவசாயம் 4. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை (.....)

18. பாரம்பரிய நெல் இனத்தை விட 4மடங்கு அதிகமான உரமிடல் அவசியமான நெல் இனம் எது?

1. BG 407 2. IR 8 3. IR 36 4. TN 1 (.....)

19. BT என்னும் இனம் எப்பயிர்டன் தொடர்புடையது?

1. நெல் 2. கோதுமை 3. பருத்தி 4. சோளம் (.....)

20. BTT என்னும் இனம் எப்பயிருடன் தொடர்புடையது?

1. நெல் 2. கோதுமை 3. பருத்தி 4. சோளம் (.....)

21. மண் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் நவீன பயிர்ச்செய்கை முறை எது?

1. சேனைப் பயிர்ச்செய்கை 2. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை

3. தானிய பயிர்ச்செய்கை 4. பச்சைவீட்டு பயிர்ச்செய்கை (.....)

22. உலகின் மொத்த நிலப்பரப்பில் விவசாய கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் நிலப்பரப்பு எத்தனை சதவீதம்?

1. 38.4 2. 30.4 3. 33.8 4. 42.8 (.....)

23. 2011ம் ஆண்டு தரவின்படி உலகின் மொத்த நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலப்பரப்பு எத்தனை சதவீதம் ஆகும்?

1. 28.4 2. 31.4 3. 23.8 4. 13 (.....)

24. விவசாய நிலம் வளம் இழப்பதால் ஆண்டுதோறும் விவசாய நிலம் எத்தனை வீதத்தினால் குறைவடகின்றது?

1. 4 2. 3 3. 2 4. 8 (.....)

25. குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய சீனாவின் விசேட பார்லி இனம் எது?

1. நொரின் 10 2. BG 407 3. சுண்டமாய் 4. TN 1 (.....)

26. BARIMASVIR 8 என்னும் குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரும் பருப்பு இனம் எந்த நாட்டுக்குரியது?

1. பிலிப்பைன்ஸ் 2. பங்களாதேஸ் 3. யப்பான் 4. சீனா (.....)

www.lkedu.lk

27. 115 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய நெல் இனம் எது?

1. IR 64 2. IR 8 3. IR 36 4. TN 1 (…..)

28. மண் அமிலத் தன்மை கொண்ட மண்ணாகக் காணப்படுமாயின் அதன் pH பெறுமானம் எவ்வாறு காணப்படும்?

1. 7ஐ விட அதிகம் 2. 7ஐ விடக் குறைவு 3. 7ஆகும் 4. 7-14 (…..)

29. மண் காரத் தன்மை கொண்ட மண்ணாகக் காணப்படுமாயின் அதன் pH பெறுமானம் எவ்வாறு காணப்படும்?

1. 7ஐ விட அதிகம் 2. 7ஐ விடக் குறைவு 3. 7ஆகும் 4. 7-14 (…..)

30. மண் நடுநிலையாகக் காணப்படுமாயின் அதன் pH பெறுமானம் எவ்வாறு காணப்படும்?

1. 7ஐ விட அதிகம் 2. 7ஐ விடக் குறைவு 3. 7ஆகும் 4. 7-14 (…..)

31. மிக நீண்ட நாட்கள் நிலத்தில் நிலைத்திருக்கும் கிருமிநாசினி எது?

1. DDT 2. MCPA 3. VIBER 4. MCP4 (…..)

32. ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கையின்படி எத்தனை மில்லியன் மக்கள் பாலைவனமாக்கத்தினால் பாதிக்கப்பட்டள்ளனர்?

1. 260 2. 200 3. 250 4. 225 (…..)

33. ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை எத்தனை மில்லியன் மக்கள் பாலைவனமாக்கத்தினால் அவதானமிக்க நிலையில் உள்ளனர் எனக் கணிப்பிடப்பட்டள்ளது?

1. 760 2. 750 3. 650 4. 225 (…..)

34. ஐக்கிய அமெரிக்காவில் பல மில்லியன் கணக்கான பறவைகள் அழிவடையக் காரணமாக இருந்த கிருமிநாசினி எது?

1. காபோபியூரன் 2. DDT 3. MCP4 4. MCPA (…..)

35. உலகம் முழுவதும் விவசாய விதை இனங்களின் சந்தை மற்றும் விவசாய உற்பத்திகளின் உரிமை எந்த பல்தேசிய கம்பனிமைய் சாரும்?

1. சின்சென்டா 2. காகீல்ஸ் 3. மொன்சென்டா 4. டியுபொன்ட் (…..)

(1x35=35புள்ளிகள்)

பகுதி II

1. பசுமைப்புரட்சியின் சுற்றாடல் சார்ந்த தாக்கங்கள் 4 தருக? (02புள்ளிகள்)
2. மரபணு தொழினுட்பத்தின் விசேட பண்புகள் 4 தருக? (02புள்ளிகள்)
3. சேதன விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முறைகளை விபரிக்குக? (03புள்ளிகள்)
4. சேதன பயர்ச்செய்கையின் நன்மைகள் நான்கு தருக? (04புள்ளிகள்)
5. உலகவிவசாய கைத்தொழில் எதிர்நோக்கும் இரு சவால்களை விளக்குக? (04புள்ளிகள்)

திருமதி.ய.பங்கஜன்

ஆசிரியை

மட்/ககு/வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம், சித்தாண்டி

www.keou.lk